உங்கள் தனிப்பட்ட தகவலை வழங்க வேண்டாம் என நீங்கள் தேர்வுசெய்தால், உங்கள் குழந்தைக்கு செவிப்புலன் பரிசோதனைக்குப் பிறகு தேவையான பின்தொடர்தல் கவனிப்பை எங்களால் ஏற்பாடு செய்ய முடியாது. எதிர்கால ஆராய்ச்சி திட்டங்கள் மற்றும் முன்னெடுப்புகள் குறித்து எங்களால் உங்களைத் தொடர்பு கொள்ள முடியாது.

## அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள்

**என் குழந்தை உரத்த சத்தங்களுக்கு எதிர்வினையாற்றுகிறது - அதற்கு இன்னும் புதிதாகப் பிறந்த குழந்தைக்கான செவித்திறன் சோதனை அல்லது செவிப்புலனியல் (audiology) மதிப்பீடு தேவையா?**

செவித்திறன் குறைபாடு என்பது உரத்த ஒலிகளைக் கேட்க முடியும் என்பதை விட மிகவும் சிக்கலானது. செவித்திறன் குறைபாடு உள்ள பெரும்பாலான குழந்தைகள் இன்னும் உரத்த ஒலிகளுக்கு எதிர்வினையாற்றுவார்கள். பேச்சுத் திறன் மற்றும் மொழி வளர்ச்சிக்கான முக்கியமான ஒலிகள், மென்மையான ஒலிகள் ஆகும். மேலும் இவற்றைச் சிறப்பு உபகரணங்கள் இல்லாமல் புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்குச் சோதிப்பது கடினம்.

**புதிதாகப் பிறந்த குழந்தைக்குச் செவித்திறன் சோதனை பாதுகாப்பானதா? சோதனை செய்வதன் அபாயங்கள் என்ன?**

செவித்திறன் சோதனை விரைவானது மற்றும் பாதுகாப்பானது. காது இணைப்புகளை அகற்றும் போது உங்கள் குழந்தை சிறிது அசௌகரியத்தை அனுபவிக்கலாம். மேலும் ஆய்வு தேவைப்படும் குழந்தையை அடையாளம் காண முடியாத ஒரு சிறிய அபாயம் செவித்திறன் சோதனையில் உள்ளது.

**புதிதாகப் பிறந்த குழந்தைக்குச் செவித்திறன் சோதனை செய்யாமல் இருந்தால் ஏற்படும் அபாயங்கள் என்ன? செவித்திறன் சோதனைக்கு மாற்று வழிகள் ஏதாவது உள்ளனவா?**

ஒரு குழந்தைக்கு செவித்திறன் குறைபாடு இருக்கும் பட்சத்தில், செவித்திறன் சோதனை செய்யாமல் இருந்தால் நோயறிதலில் ஏற்படும் தாமதம்தான் முக்கிய அபாயமாகும். ஆரம்பகால நோயறிதல் என்பது ஆரம்பகால உதவியைப் பெற அனுமதிக்கிறது, இது செவித்திறன் குறைபாடு உள்ள குழந்தைகளுக்குக் கருத்துப் பரிமாற்றத் திறன்களை வளர்ப்பதற்கான மிகச் சிறந்த வாய்ப்பை வழங்குகிறது. புதிதாகப் பிறந்த குழந்தைகளின் செவித்திறன் சோதனைக்கு மாற்று வழிகள் எதுவும் இல்லை.

## கேட்கும் திறன் காலப்போக்கில் மாறலாம்

செவித்திறன் குறைபாடு காலப்போக்கில் உருவாகலாம், எனவே உங்கள் குழந்தை வளரும்போது அதன் செவித்திறனில் கவனம் செலுத்துவது அவசியமாகும். உங்கள் குழந்தையின் செவித்திறன் குறித்து உங்களுக்கு ஏதேனும் கேள்விகள் அல்லது கவலையுணர்வுகள் இருந்தால், உங்கள் தாய்மை மற்றும் குழந்தை சுகாதாரச் செவிலியரிடமோ அல்லது குடும்ப மருத்துவரிடமோ பேசவும்.

## ஏதேனும் கேள்விகள் அல்லது கவலையுணர்வுகள் உள்ளனவா?

**VIHSP -ஐத் தொடர்பு கொள்ளவும்**

ஒரு VIHSP செவித்திறன் சோதனைக் கருவி இயக்குபவரிடம் பேசவும்

VIHSP பகுதி மேலாளர்


**VIHSP தலைமை அலுவலகம்**

ராயல் குழந்தைகள் மருத்துவமனை மெல்போர்ன்
சமூகக் குழந்தைச் சுகாதார மையம்

50 ஃப்ளெமிங்டன் சாலை பார்க்வில்
விக்டோரியா 3052 ஆஸ்திரேலியா
தொலைபேசி +61 3 9345 4941
மின்னஞ்சல் email.vihsp@rch.org.au
www.rch.org.au/vihsp




The Royal Children's Hospital Melbourne

**விக்டோரியன் குழந்தை செவித்திறன் சோதனைத் திட்டம்**

# உங்கள் குழந்தையின் செவித்திறன் சோதனை



Victorian Infant Hearing Screening Program

# உங்கள் குழந்தையின் செவித்திறன் சோதனை

## புதிதாகப் பிறந்த குழந்தைக்குச் செவித்திறன் சோதனை ஏன் அவசியம் செய்யவேண்டும்?

புதிதாகப் பிறந்த குழந்தைக்குச் செவித்திறன் சோதனை என்பது உங்கள் குழந்தை பிறந்த பிறகு செய்யும் வழக்கமான சுகாதாரச் சோதனைகளில் ஒன்றாகும். இது உங்கள் குழந்தையின் செவித்திறனை இலவசமாகவும், விரைவாகவும் சரிபார்க்கும். இது ராயல் குழந்தைகள் மருத்துவமனையால் நடத்தப்படும், விக்டோரியன் குழந்தை செவித்திறன் சோதனைத் திட்டத்தால் (VIHSP) வழங்கப்படுகிறது. வாழ்க்கையின் முதல் சில வாரங்களில் காது கேளாமை என்பது வெளிப்படையாகத் தெரியாது, அத்துடன் அது பேச்சுத் திறன் மற்றும் மொழி வளர்ச்சியையும் பாதிக்கலாம். முன்கூட்டியே கண்டறிதல் என்பதன் பொருள் என்னவென்றால், செவித்திறன் குறைபாடுள்ள குழந்தைகள் தம் வாழ்க்கையில் மிகச் சிறந்த தொடக்கத்தைப் பெற முடியும் என்பதாகும்.

## புதிதாகப் பிறந்த குழந்தைகளுக்கான செவித்திறன் சோதனை எவ்வாறு செய்யப்படுகிறது?

உங்கள் ஒப்புதலுடன், செவித்திறன் சோதனைக் கருவி மூலம் உங்கள் குழந்தையின் நெற்றி, கன்னம் மற்றும் கழுத்தின் பின்புறத்தில் சிறிய ஒட்டும் உணரிகள் (sensors) வைக்கப்படும். செவித்திறன் சோதனைச் சாதனம் ஒவ்வொரு காதுக்கும் மேல் வைக்கப்பட்டுள்ள காது இணைப்புகள் (மென்மையான செவிக் கிண்ணம்) மூலம் உங்கள் குழந்தையின் காதுகளில் மென்மையான ஒலிகளை ஒலிக்கச் செய்யும். ஒலிகளுக்கு உங்கள் குழந்தையின் எதிர்வினையை உணரிகள் கண்டறியும்.

சோதனை வலியற்றது, மேலும் அது பொதுவாக உங்கள் குழந்தையை அமைதிப்படுத்திவிடும். உங்கள் குழந்தை அமைதியாக இருந்தால் அல்லது தூங்கிக்கொண்டிருந்தால், அத்துடன் அறையும் அமைதியாக இருந்தால், இதற்கு ஐந்து நிமிடங்களுக்கும் குறைவான நேரமே ஆகும். சோதனையின் போது உங்கள் குழந்தையைப் தூக்கி வைத்துக் கொள்ளலாம் அல்லது தாய்ப்பால் கொடுக்கலாம்.

## புதிதாகப் பிறந்த குழந்தைக்கான செவித்திறன் சோதனை என் குழந்தைக்கு எப்போது மேற்கொள்ளப்படும்?

அவர்கள் நன்றாகவும், அமைதியாகவும் இருக்கும் பட்சத்தில், பிறந்த உடனேயே குழந்தைளுக்குச் சோதனை மேற்கொள்ள நாங்கள் முயற்சிக்கிறோம். உங்கள் குழந்தை புத்திளம் சிசு தீவிர சிகிச்சைப் பிரிவு (Neonatal Intensive Care Unit) அல்லது சிறப்புப் பராமரிப்பு மழலையர் காப்பகத்தில் (Special Care Nursery) இருந்தாலோ, அல்லது 34 வார கர்ப்பத்திற்கு முன் பிறந்திருந்தாலோ, உங்கள் குழந்தை நலமாக இருந்தால், அல்லது மருத்துவமனையிலிருந்து வீட்டிற்குச் செல்லத் தயாராக இருந்தால் நாங்கள் சோதனையை மேற்கொள்ளக் காத்திருப்போம்.

## என் குழந்தையை மருத்துவமனையில் சோதனை செய்ய முடியாவிட்டால் என்ன செய்வது?

அமைதிப்படுத்த முடியாத அல்லது மருத்துவ மனையிலிருந்து முன்கூட்டியே வெளியேறும் சில குழந்தைகளுக்கு, அவர்கள் மருத்துவமனையை விட்டுச் செல்வதற்கு முன், புதிதாகப் பிறந்த குழந்தைக்கான செவித்திறன் சோதனை கிடைக்காமல் போகலாம். இப்படி நடக்கும் பட்சத்தில், வெளிநோயாளிக்கான சந்திப்பு ஏற்பாட்டைச் செய்ய நாங்கள் உங்களைத் தொடர்புகொள்வோம்.

## செவித்திறன் சோதனையின் முடிவை நான் எவ்வாறு தெரிந்துகொள்வது?

சோதனை முடிந்தவுடனேயே உங்களுக்கு முடிவு வழங்கப்படும். *தேர்வானது* என்ற முடிவின் பொருள் என்னவென்றால், சோதனையில் தெளிவான எதிர்வினை இருந்தது, இதற்கு மேலும் சோதனை தேவையில்லை என்பதாகும். தெளிவான எதிர்வினை இல்லையென்றால், புதிதாகப் பிறந்த குழந்தைக்கான செவித்திறன் சோதனை வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையில் மீண்டும் மீண்டும் மேற்கொள்ளப்படும். உங்கள் குழந்தையின் இறுதிச் செவித்திறன் சோதனை தெளிவான எதிர்வினையைக் காட்டவில்லை என்றால், அவர்கள் விரிவான பரிசோதனைக்காக ஒரு செவிப்புலனியல் நிபுணரிடம் (audiologist) பரிந்துரைக்கப்படுவார்கள். இந்தப் பரிந்துரையைப் பற்றிக் கலந்தாலோசிக்க VIHSP பகுதி மேலாளர் மற்றும் VIHSP ஆரம்பகால ஆதரவுச் சேவையினர் உங்களைத் தொடர்பு கொள்வார்கள்.

உங்கள் குழந்தையின் செவித்திறன் சோதனை முடிவை அவர்களின் *எனது உடல்நலம், கற்றல் மற்றும் மேம்பாட்டுப் பதிவேட்டில்* (பச்சை புத்தகம்) மற்றும் VIHSP தரவுத்தளத்தில் நாங்கள் பதிவு செய்வோம்.

## என்னைப் பற்றிய, மற்றும் என் குழந்தையைப் பற்றிய தகவல்கள் எவ்வாறு பதிவு செய்யப்பட்டு பயன்படுத்தப்படுகின்றன?

VIHSP தரவுத்தளமானது VIHSP -ஐக் கண்காணிக்கவும் மதிப்பீடு செய்யவும், மேலும் கைக்குழந்தைகள் மற்றும் அவர்களது குடும்பங்களைச் சேவைகளுடன் இணைக்கவும் பயன்படுகிறது. *சுகாதரப் பதிவேடுகள் சட்டம் 2001* -இல் உள்ள சுகாதாரத் தனியுரிமைக் கோட்பாடுகள் மற்றும் *தனியுரிமை மற்றும் தரவுப் பாதுகாப்புச் சட்டம் 2014* -இல் உள்ள தகவல் தனியுரிமைக் கோட்பாடுகளுக்கு ஏற்ப VIHSP உங்களைப் பற்றிய, மற்றும் உங்கள் குழந்தையைப் பற்றிய தகவல்களைச் சேகரித்துப் பயன்படுத்துகிறது.

இச்சட்டங்களானது, மதிப்பீடு, கல்வி மற்றும் ஆராய்ச்சிக்கான தகவல்களைப் பயன்படுத்துவதையும் உள்ளடக்கியதாகும்.

சேகரிக்கப்பட்ட தகவல்களை இரகசியமாகவும், அத்துடன் அங்கீகரிக்கப்படாத முறையில் அணுகுதல், பயன்படுத்தல் அல்லது இழந்து போதல் போன்றவற்றிலிருந்து பாதுகாப்பாகவும் வைத்திருக்க VIHSP உறுதி பூண்டுள்ளது.

உங்கள் குழந்தை சரியான சேவைகள் மற்றும் சிகிச்சையுடன் சேர்க்கப்பட்டுள்ளதா என்பதை உறுதிப்படுத்த, பிறப்பு விவரங்கள், தொடர்பு விவரங்கள் மற்றும் சோதனை அல்லது செவிப்புலனியல் முடிவுகள் போன்ற தகவல்கள் VIHSP மற்றும் பின்வருவோர் உட்பட பிற நிபுணர்களிடையே பகிரப்படலாம்:

- செவிப்புலனியல் நிபுணர்கள் (audiologists)
- மருத்துவர்கள்
- தாய்மை மற்றும் குழந்தை நலச் செவிலியர்கள்
- ஆரம்பக் குழந்தைப் பருவத் தலையீட்டுச் சேவைகள்
- பிற சுகாதாரம் மற்றும் கல்விக்கான தொழில்முறை வல்லுநர்கள்.

மதிப்பீடு, கல்வி மற்றும் ஆராய்ச்சி நோக்கங்களுக்காக VIHSP உங்கள் தகவல்களைப் பயன்படுத்தலாம். எதிர்காலச் செயல்திட்டங்கள் குறித்து உங்களைத் தொடர்பு கொள்ளலாம். அந்த நேரத்தில் அச்செயல்திட்டங்களைப் பற்றி நீங்கள் மேலும் அறிந்து கொள்ள விரும்புகிறீர்களா இல்லையா என்பதை நீங்கள் தெரிவு செய்து கொள்ளலாம். செயல்திட்டங்கள் ஆராய்ச்சியை உள்ளடக்கியிருந்தால், இவை *மனித ஆராய்ச்சியில் நெறிமுறை நடத்தை பற்றிய தேசிய அறிக்கைக்கு* ஏற்ப நடத்தப்படுகின்றன.

VIHSP -ஆல் சேகரிக்கப்பட்ட தகவல்களை வைத்து என்ன நடக்கும் என்பது பற்றி நீங்கள் மேலும் அறிய விரும்பினால், தயவுசெய்து VIHSP பகுதி மேலாளரிடம் பேசவும். ராயல் குழந்தைகள் மருத்துவமனையில் உள்ள தகவலறியும் உரிமைக்கான அலுவலகத்தைத் தொடர்புகொள்வதன் மூலம் உங்கள் தனிப்பட்ட தகவல்களை அணுகலாம் அல்லது திருத்தலாம்: www.rch.org.au/foi